(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.246/2019**

CNR.No. TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW. 7

Name : மணிவண்ணன்
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 10.11.2021.

முதல் விசாரணை:

நான் தற்போது பரமத்தி வட்டம், போளாரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். திருச்செங்கோடு வட்டம், திருச்செங்கோடு டவுன் கிராம நிர்வாக அலுவலராக 27.10.2018 அன்று காலை 10.00 - 10.30 மணிக்கு நான் பணியிலிருந்தபோது நானும், நகர டவுன் சர்வேயர் வினோத்குமாரும், நீதிமன்ற ஆணையர் முனிராஜ் என்பவரும் மற்றும் காவல் துறை ஆய்வாளர், போலிசாரும் திருச்செங்கோடு உரிமையியல் நீதிமன்ற ஆணைப்படி திருச்செங்கோடு டவுனில் கிழக்கு ரத வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தை பார்வையிட சென்றோம். வழக்கு எண் தற்போது ஞாபகமில்லை. நான் ஆவணங்களுடன் சர்வேயருடன் சென்றேன். அப்போது வாதி கணேசன், மற்றும் பிரதிவாதிகள் கன்னியப்பனும், மகேந்திரனும் தகராறு செய்துகொண்டிருந்தார்கள். சம்பந்தப்பட்ட ஒரு நபர் போட்டோ எடுத்துக்கொண்டிருந்தார். கன்னியப்பனும், மகேந்திரனும் எதற்கு போட்டோ எடுக்கிறாய் என்று தடுத்தார்கள். போட்டோ எடுத்துக்கொண்டிருந்தவரை தள்ளிவிட்டார்கள். சொத்துக்கு சம்பந்தப்பட்ட கணேசன் ஏன் அவ்வாறு தள்ளிவிட்டீர்கள் என்று கன்னியப்பனையும், மகேந்திரனையும் கேட்டார். கன்னியப்பனும், மகேந்திரனும் வாய்க்கு வந்தபடி கெட்ட வார்த்தையால் பேசினார்கள். மகேந்திரன் கையிலிருந்த கொடுவாளால் காவல் துறை, ஆணையர் யார் வந்தாலும் சரி, கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி எங்களை பணி செய்ய விடாமல் தடுத்தார். உடனே அருகிலிருந்தவர்கள் வந்து சமாதானம் செய்தார்கள். அதற்கு பிறகு நாங்கள் அளந்து சர்வேயர் மேப் போட்டு விசாரணை மேற்கொண்டார்கள். கமிஷனர் நிலத்தை பார்வையிட்டு அளந்து முடித்துவிட்டு சென்றுவிட்டார். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் தான் சம்பவத்தன்று பிரச்சினை செய்தவர்கள். போலிசார் சம்பவ இடத்திலேயே இருந்தார்கள், என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.-

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் 27.10.2018ம் தேதி ஆகும். 24.10.2018ம் தேதி கன்னியப்பனின் மனைவி நிர்மலாதேவி என்னிடம் ஒரு objection petition கொடுத்தார் என்றால் தபாலில் ஒரு மனுவை பெற்றோம். அந்த மனுவை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. 24.10.2018ம் தேதி objection petition பெற்றபோது நான் எவ்வாறு 27.10.2018ம் தேதி அளக்க சென்றேன் என்றால் நீதிமன்ற உத்தரவுபடி ஆணையர் அழைத்ததன் பேரில் சென்றேன். நீதிமன்ற ஆணையர் எனக்கு எப்போது நோட்டிஸ் கொடுத்தார் என்றால் 25.10.2018ம் தேதி தாலுக்கா சர்வேயர் நோட்டிஸ் கொடுத்தார். 27.10.2018ம் தேதி யார் யார் அளக்க சென்றோம் என்றால் நான், நீதிமன்ற ஆணையர், தாலுக்கா சர்வேயர், போலிசார் ஆகியோர் அளக்க சென்றோம். நாங்கள் அளக்க சென்றபோது அந்த கட்டிடத்தின் கதவு, ஜன்னல்கள் எதுவும் சேதப்படுத்தப்பட்டிருந்ததா என்றால் இல்லை, ஆனால் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்தில் எத்தனை கடைகள் இருந்தது என்றால் 3 முதல் 4 கடைகள் இருந்தது. எல்லா கடைகளும் திறந்திருந்தது. கிராம நிர்வாக அதிகாரி முன்பு கொடுவாளை எடுத்துக்கொண்டு பிரச்சினை செய்த போது கிராம நிர்வாக அதிகாரி என்ற முறையில் உடனடியாக புகார் செய்தேனா என்றால் இல்லை. மகேந்திரன் எங்கிருந்து அரிவாளை எடுத்து வந்தார் என்றால் தெரியாது. மகேந்திரன் பிரச்சினைக்கு பிறகு அரிவாளை எங்கு எடுத்து சென்றார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அங்கு எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் சுமார் 6, 7 போலிசார் இருந்தனர். 6, 7 போலிசார் இருந்த போது ஒருவர் அரிவாளை எடுத்து வெட்ட சென்றபோது போலிசார் யாரும் தடுக்கவில்லையா என்றால் இல்லை. அழைத்து பேசினார்கள். போட்டோ எடுத்தவரை தள்ளிவிட்டதாக சொல்லியுள்ளேன் அப்போது அவருக்கு காயம் எதுவும் பட்டதா என்றால் இல்லை. அரிவாளை எடுத்துக்கொண்டு நான் நின்ற இடத்திற்கு வலது புறம் வந்தாரா அல்லது இடது புறம் வந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. அங்கு நின்றுகொண்டிருந்தவர்கள் எந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு கிழபுறமாக நின்றுகொண்டிருந்தார்கள். அரிவாளை சாதாரணமாக எடுத்து வந்தாரா அல்லது வெட்டுவது போல் ஓங்கிக்கொண்டு வந்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மகேந்திரன் யாரை வெட்ட வந்தார் என்றால் கணேசனை வெட்ட வந்ததாக சொன்னார்கள், எனக்கு கணேசன் யார் என்று அதற்கு முன்பு தெரியாது. சொத்துக்கு சம்பந்தப்பட்டவர் கணேசன் என்றால் மகேந்திரனுக்கும், கன்னியப்பனுக்கும் உரிமை இல்லையா என்றால் சர்வே எண்.103/1சி1 சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. சொத்தை அளந்து முடித்தோம் என்றால் சரிதான். ஆனால் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் 25.10.2018 அன்று நிர்மலாதேவி கொடுத்த மனுவை பெற்றுக்கொண்டு தான் மேற்படி நிலத்தை அளக்கவில்லை என்று பதில் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நிலத்தை அளந்து முடித்ததற்கான ரிப்போர்ட்டை தாசில்தார் அலுவலகத்திற்கு அனுப்பவில்லையா என்றால் சர்வேயர் தான் அனுப்புவார். நானும் நிலத்தை அளக்கவில்லை என்று தாசில்தாருக்கு ரிப்போர்ட் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களை பணி செய்ய விடாமல் தடுத்ததாக சொல்லியுள்ளேன், எந்த விதத்தில் பணி செய்ய விடாமல் தடுத்தார்கள் என்றால் சர்வேயரையும், நீதிமன்ற ஆணையரையும் பணி செய்ய

விடாமல்தடுத்தார்கள். வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் அவர்களது வழக்கறிஞர்கள் இருந்தார்களா என்றால் ஞாபகமில்லை. எங்கள் தரப்பில் போட்டோ, வீடியோ எதுவும் எடுத்தோமா என்றால் இல்லை, போலிசார் எடுத்தார்கள். அங்கு வந்த 6 போலிசாரும் சீருடையில் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். எப்போது நிலத்தைஅளந்து முடித்தோம் என்றால் 12.00 மணியளவில் அளந்து முடித்தோம். சர்வேயருடன் யார் யார் வந்திருந்தார்கள் என்றால் சர்வேயர், அவரது உதவியாளர், எனது உதவியாளர், காவல் துறையினர் ஆகியோர் வந்திருந்தார்கள். நிர்மலாதேவி கொடுத்த objection petition ஐ மறைத்து கணேசனுக்கு ஆதரவாக நிலத்தை அளக்க சென்றபோது எதிரிகள் objection மனுவை முடித்துவிட்டு அளக்கலாம் என்று சொன்னபோது அதையும் பொருட்படுத்தாமல் கணேசனுக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 25.10.2018ம் தேதி தாலுக்கா சர்வேயர் நோட்டிஸ் கொடுத்தார், அந்த நோட்டிசை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது குவிமுச 161(3) வாக்குமூலத்தில் கட்டிடத்தின் கதவுகள் திறந்திருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலிசார் கேட்டார்களா என்றால் இல்லை.

மறுவிசாரணை.- இல்லை.

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.246/2019**

CNR.No. TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW. 8

| | | |
|---|---|---|
| Name | : | பிரபுகுமரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 10.11.2021.

முதல் விசாரணை:

நான் தற்சமயம் சீதாராம்பாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 27.10.2018ம் தேதி காலை 10.00 - 10.15 மணியளவில் நானும், கிராம நிர்வாக அலுவலர் மணிவண்ணனும் திருச்செங்கோடு கிழக்கு ரத வீதியில் உள்ள இடத்தை அளப்பதற்காக நீதிமன்ற உத்தரவுபடி அங்கு சென்றிருந்தோம். அங்கு கணேசனும், கன்னியப்பனுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. அளக்கும்போது அளப்பதை தடுத்தார்கள். நகராட்சி சர்வேயர் வினோத்குமார், காவல் துறை அதிகாரிகள், அங்கிருந்தார்கள். அப்போது கன்னியப்பனும் , மகேந்திரனும் அளக்கக்கூடாது என்று சொன்னார்கள். அதை ரமேஷ் என்பவர் போட்டோ எடுத்தார். அவரை ஏன் போட்டோ எடுக்கிறாய் என்று கன்னியப்பனும், மகேந்திரனும் கீழே தள்ளிவிட்டார்கள். கணேசன் அதை கேட்டதற்கு போலிசார் எத்தனை பேர் இருந்தாலும் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து மகேந்திரன் மிரட்டினார். பக்கத்தில் இருந்தவர்கள் தடுத்தார்கள். அதன் பிறகு நான் அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் சம்பவ தினத்தன்று பிரச்சினை செய்தவர்கள்.

குறுக்கு விசாரணை.-

என்றைக்கு அளக்க போனோம் என்றால் 27.10.2018ம் தேதி சென்றோம். எதன் அடிப்படையில் அளக்க சென்றோம் என்றால் நீதிமன்ற உத்தரவின்படி அளக்க சென்றோம். நீதிமன்ற உத்தரவு எனக்கு எப்படி தெரியும் என்றால் தாலுக்கா சர்வேயர் மூலம் தெரியும். தாலுக்கா சர்வேயர் நீதிமன்ற உத்தரவு மற்றும் சம்மன்ஸ் எதையும் பெறவில்லை என்று தாசில்தார் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பதிலளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. யார் யார் அங்கு சென்றோம் என்றால்

விஏஓ, நகராட்சி சர்வேயர், ஆணையர் ஆகியோர் சென்றோம். நாங்கள் அங்கு சென்றபோது மகேந்திரனும், கன்னியப்பனும் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நாங்கள் அளக்க சென்ற கட்டிடத்தில் எத்தனை கடைகள் இருந்தது என்றால் சுமார் 3, 4 கடைகள் இருந்தது. நாங்கள் சென்றபோது கதவு , ஜன்னல்கள் உடைக்கப்பட்டிருந்ததா என்றால் ஞாபகமில்லை. அங்கிருந்த அனைத்து கதவுகளும் திறந்திருந்ததா என்றால் திறந்திருந்தது. மகேந்திரன் சின்ன கத்தியா, பட்டன் கத்தியா, என்ன கத்தி எடுத்து வந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மகேந்திரன் கத்தியை எடுத்து வரும்போது காவல் துறையினர் அங்கிருந்தார்களா என்றால் அங்கிருந்தார்கள். மகேந்திரன் கத்தியை எடுத்துக்கொண்டு எனக்கு வலது புறமாக வந்தாரா, இடது புறமாக வந்தாரா என்றால் எனக்கு முன்பக்கமாக வந்தார். கத்தியை எடுத்துகொண்டு குத்துவது போல் வந்தாரா என்றால் இல்லை, கையில் வைத்திருந்தார். நீதிமன்ற ஆணையர் அவரது சாட்சியத்தில் எதிரிகள் ஆயுதம் எதுவும் எடுத்துவரவில்லை, வாய்ச்சண்டை மட்டும் தான் செய்தார்கள் என்று சொல்லியுள்ளார், நான் ஆயுதம் எடுத்து வந்ததாக சொல்லியுள்ளேன் எது உண்மை என்றால் நான் சொல்வது தான் உண்மை. நான் அளப்பதற்கு உள்ளே சென்றேனா என்றால் இல்லை. விஏஓ, சர்வேயர், ஆணையர் தான் சென்றார்கள். கட்டிடத்திற்குள் அளக்க சென்ற ஆணையரே ஆயுதம் எடுத்து வரவில்லை என்று சொன்னபோது நான் ஆயுதம் எடுத்து வந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் விஏஓ-ம் அலுலவகத்திலிருந்து கட்டிடத்திற்கு சென்றோமா அல்லது நேரடியாக கட்டிடத்திற்கு சென்றோமா என்றால் அலுவலகத்திலிருந்து தான் கட்டிடத்திற்கு சென்றோம். எதிரிகள் சம்பவ இடத்தில் என்னிடம் விஏஓ வரவில்லையா என்று கேட்டதற்கு ஆணையர் விஏஓ வை அழைத்துவரும்படி சொல்லி நான் அவரை டீ கடையிலிருந்து அழைத்து வந்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி விஷயங்கள் வீடியோவில் பதிவாகி உள்ளதென்றால் சரியல்ல. வீடியோ பதிவு படி நானும் விஏஓ-ம் கட்டிடத்திற்குள் செல்லவில்லை என்றால் சரியல்ல. மகேந்திரன் கத்தியை எடுத்துக் கொண்டு வந்தபோது காவல் துறையினர் தடுத்து கைது செய்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஒருவர் கத்தி எடுத்துக்கொண்டு மிரட்டும்போது நானோ, விஏஓ - ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் விஏஓ அது பற்றி சொல்லவில்லை. போலிசார் விசாரணையின்போது கட்டிடத்தின் கதவுகள் திறந்திருந்ததாக சொல்லவில்லை என்றால் போலிசார் கேட்கவில்லை.

மறுவிசாரணை.- இல்லை.